RPAD

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) சிவகங்கை அவர்களின்

நடவடிக்கைகள்.

*முன்னிலை: திருமதி. இரா. காவியம் டி.சி.இ.,*

ந.க.எண்: 3317/2017/சிம-4 நாள்: 19.03.2018

பொருள்: நகர் ஊரமைப்பு – சிவகங்கை மண்டலம் - சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி வட்டம் - கல்லல் ஊராட்சி ஒன்றியம் - கோவிலூர் கிராமம் - நில அளவை எண்: 3/5,6,12-இல் 28489.87சமீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (வசந்தம் நகர்) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்துதல் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்:78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (ந.வ4(3) நாள்: 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்: 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (ந.வ4(3) நாள்: 13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்: 13193/2017/LA2 நாள்: 30.10.2017 மற்றும் 07.11.2017.
4. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) கல்லல் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.பி3/1951/2017 நாள்: 27.12.2017.
5. மனுதாரர் திரு. S. இராமன் அவர்களின் விண்ணப்பம் நாள்: 20.12.2017.

******

உத்தரவு:

பார்வை 1 மற்றும் 2-இல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 3-இல் கண்ட வழிகாட்டி நெறிமுறையின்படி பார்வை 4-இல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியம், கோவிலூர் கிராமம் நில அளவை எண்: 3/5,6,12-இல் 28489.87சமீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (வசந்தம் நகர்) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு அம்மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ.வ.மு/நஊதுஇ(சிம)எண்: 178/2018 என எண்ணிட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் (in principle approval) வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு | - | 28489.87சமீ |
| மொத்த மனைகள் | - | 130 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | - | 30 |
| பூங்காவாக மாற்றப்பட்ட மனைகள் | - | 10 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | - | 90 |
| பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பரப்பளவு | - | 1751.95சமீ (10.05%) |

நிபந்தனைகள்:

1. பார்வை 1 மற்றும் 2-இல் கண்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளபடி மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள மனையில் 71 மனைகளுக்கு (71X500=35,500/-) ரூபாய் முப்பத்தி ஐந்தாயிரத்து ஐநூறு மட்டும்) கூராய்வு கட்டணம் (Scrutiny Fees) தனியாக பெறப்பட்டுள்ளது. இதர மனைகளுக்கும் கூராய்வு கட்டணம் www.tnlayoutreg.in என்ற இணையதளத்தில் மனை ஒன்றுக்கு ரூபாய் ரூ.500/- வீதம் செலுத்தப்பட்ட இரசீதினை பெற்றுக்கொண்டு வரன் முறைப்படுத்தப்பட வேண்டும்.

2. வரன்முறைப்படுத்துதல் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் கீழ்க்கண்ட அரசு கணக்கில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை மண்டல அலுவலகத்தில் கீழ்க்காணும் தலைப்பினை ஊர்ஜிதம் செய்தபின் கருவூலத்தில் தொகை செலுத்தப்பட வேண்டும்.

**Regularisation Charges Head of Account:**
0217 - Urban Development 60 - Other Urban Development Schemes
800 - Other receipts AT-Receipt under Regularisation charges of
Unapproved layouts and plots DTCP
**(DPC: 0217-60-800-AT-0007)**

3. வளர்ச்சிக் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் பெற்ற பின்னரே இம்மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. தொகைகள் மற்றும் கட்டணங்கள் செலுத்துவதற்கான கேட்பு அறிவிப்பு பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரா் கேட்பு அறிவிப்பின்படி கேட்பு அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அனைத்துத் தொகைகள் மற்றும் கட்டணங்களை தகுதி வாய்ந்த அதிகாரியிடம் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட கால அளவிற்குள் கட்டணங்கள் செலுத்தப்படாவிடில் காலதாமத காலத்திற்கு, ஆண்டொன்றுக்கு 6 சதவிகித வட்டி வசூலிக்கப்படும். மேற்சொன்ன கேட்பு அறிவிப்பு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 90 நாட்களுக்குள் கட்டணங்கள் செலுத்தப்படாவிட்டால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட வேண்டும்.

5. மனைப்பிரிவில் கண்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய வேண்டும் அல்லது உள்ளாட்சி சாலைகளாக ஏற்றெடுக்க நகராட்சி சட்ட விதிகளின் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

6. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமா்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

- ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

விண்ணப்பத்தாரர் மேற்கொண்டு வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), கல்லல் ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம் அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

வரன்முறைப்படுத்திய மனைப்பிரிவின் நகல் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச்சான்று அனுப்புமாறு வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), கல்லல் ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும், மேற்படி வரன்முறைப்படுத்திய மனைப்பிரிவு வரைபடத்தினை தங்களது அலுவலக விளம்பர பலகையில் பெரிதுபடுத்தி ஒட்டி பொதுமக்களுக்கு விளம்பரபடுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

இணைப்பு:

1. இரண்டு தொகுப்பு வரைபடங்கள்
2. அரசாணை எண்: 78 மற்றும் 172-ன் நகல்கள்.

பெறுநர்:
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
கல்லல் ஊராட்சி ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.

நகல்:

1. நகர் ஊரமைப்பு ஆணையர்,
807, அண்ணாசாலை,
சென்னை-2 அவர்களுக்கு பணிந்து
சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
சிவகங்கை மாவட்டம். — வரைபடத்துடன்
3. உதவி இயக்குநர்,
நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
சிவகங்கை மாவட்டம். — சாலை மற்றும் OSR பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.
4. வட்டாட்சியர்,
காரைக்குடி.
5. சார்பதிவாளர்,
காரைக்குடி Joint - II — சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.
6. தொழில்நுட்ப வைப்பறை.
7. திரு. S. இராமன்,
த/பெ. சாத்தையா,
No: 23, அறிவகம்,
சுப்பிரமணியபுரம் 4-வது வீதி,
தெற்கு பிரிவு,
காரைக்குடி - 2

கல்லல் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் செயல்முறைகள் (3)

முன்னிலை: திரு.கு.பர்னபாஸ்அந்தோணி

ந.க.பி3/1951/2017 நாள்:20, 06.2018

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - சிவகங்கை மாவட்டம் - கல்லல் ஊராட்சி ஒன்றியம் கோவிலூர் ஊராட்சி, பேயன்பட்டி கிராமம் சர்வேஎண்.3/5,6,12-ல் வசந்தம்நகரில் அமைந்துள்ள மனைப்பிரிவு வரண்முறைப்படுத்துதல் - திரு. S. இராமன் என்பவர் 90 மனைகள் -இதில் 15780.83 சதுர மீட்டர் அளவுள்ள மனைகள் அனுமதி வழங்கி உத்தரவிடல்.

பார்வை: 1) அரசாணை நிலை எண்.255 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் 18.08.1997.
2) நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண3317/2017/சிம4 நாள் 19.03.2018.
3) திரு. S. இராமன் என்பவரின் வரண்முறைப்படுத்துதல் கட்டணம் சார்நிலை கருவூலக சலான் நாள் 03.05.2018, 05.06.2018மற்றும் 15.06.2018.
4) கோவிலூர் ஊராட்சியில் வளர்ச்சி கட்டணம் வங்கி வரைவோலை சமர்ப்பித்த நாள் 18.06.2018.

--------

உத்தரவு:

சிவகங்கை மாவட்டம் - கல்லல் ஊராட்சி ஒன்றியம் கோவிலூர் ஊராட்சி/ கிராமம் சர்வே எண். 3/5, 6, 12-ல் அமைந்துள்ள வசந்தம்நகரில் கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு அம்மனைப்பிரிவு வரைபடத்திற்கு மவ.வமு/நஊ.து.முஉ.சிம.எண்/178/2018 எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வரண்முறைப்படுத்துதல் - திரு. S. இராமன் எனபவர் 15780.83 சதுர மீட்டர் அளவுள்ள மனைக்கு அனுமதியற்ற மனைப்பிரிவு வரண்முறைப்படுத்தி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு அம்மனைப்பிரிவு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் In Principle Approval வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பளவு | : | 28489.87ச.மீ. |
| மொத்த மனைகள் | : | 130 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | : | 30 |
| பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகள் | : | 10 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | : | 90 |
| பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பரப்பளவு | : | 1751.95 ச.மீ(10.05%) |

இதிலுள்ள விற்கப்படாத 90 மனைக்கு 15780.83 சதுரமீட்டர் அளவுள்ள இடத்திற்கு திரு. S. இராமன் என்பவர் வரண்முறைப்படுத்துதல் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு 15780.83 x 30 = 473426/-ன்படி சார்நிலை கருவூலகத்தில் 03.05.2018, 05.06.2018மற்றும் 15.06.2018. அன்று செலுத்திவிட்டு அதன் சலான் நகலினை சமர்ப்பித்துள்ளார்.

மேலும் வளர்ச்சி கட்டணம் விற்கப்படாத மனைக்கு ஒரு சதுர மீட்டருக்கு 15780.83 x 25 = 394522/- க்கான தனி அலுவலர் கோவிலூர் என்ற பெயரில் வங்கி வரைவாக 18.06.2018 அன்று எடுத்து வரைவினை சமர்ப்பித்துள்ளார்.

மேற்கண்டவாறு தொகை செலுத்தியதால் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் சர்வே எண். 3/5, 6, 12-ல்-இதில் உள்ள பிளாட் எண்கள் A-Block- 1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17, B- Block 1,2,5,6,7,8,9,14,15, C- Block-5,6,10,11,14,D-Block-4,5,6,7,8,9,10,11,E-Block-2,3,4,5,6,7,8,9,10,11,13,14,15,16,17,19,F-Block1,2,3,4,5,13,14,15,18,19,20,21, 22,23, G-Block – 1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17,18,19,20,21ஆக மொத்தம் 90 மனைகள் -இதில் 15780.83 சதுர மீட்டர் அளவுள்ள மனைப்பிரிவு மட்டும் ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்ள

1) மனைப்பிரிவின் ஊடே உயர் அழுத்த மின் கோபுர பாதை செல்லுமாயின் அதற்கு இருபுறத்திலும் 9 மீ அகலத்திற்கு OSR திறவிடம் நிலை நிறுத்தப்படவேண்டும்.
2) மனையின் ஊடே குறைந்த அழுத்த மின்கம்பி பாதை செல்லுமாயின் அதன் போக்கை சாலை போக்கில் மாற்றி அமைக்கப்படவேண்டும்.
3) மனையின் ஊடே உயர் அழுத்த மின்கம்பிப்பாதை செல்லுமாயின் அதனை மாற்றி அமைக்கப்படவேண்டும்.
4) மனையின் ஊடே போக்கு கால்வாய் செல்லுமாயின் அதற்கு இடையூறின்றி கட்டிடம் கட்டப்படவேண்டும்.
5) மனைப்பிரிவின் அருகில் நீர்நிலைகள் அமையுமாயின் கட்டிடத்தில் இருந்து வெளிவரும் கழிவுநீர் அவற்றில் கலக்காத வண்ணம் உறுதி செய்யப்படவேண்டும்.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) 20/6/18
கல்லல்.

20.6.18

பெறுநர்:

திரு. S. இராமன்
த/பெ. சாத்தையா
No.23, அறிவகம்,
சுப்பிரமணியபுரம் 4-வது வீதி,
தெற்கு பிரிவு
காரைக்குடி - 2

நகல்: நகர் ஊரமைப்பு, மண்டல துணை இயக்குநர், சிவகங்கை.
நகல்: 2-ம் நிலை சார்பதிவாளர், பத்திரப்பதிவுத்துறை, காரைக்குடி பதிவு அலுவலகம், சிவகங்கை மாவட்டம்.